நாள்: 15.07.2026
OS.193/2022
பெயர் யாகூப் ஹசன்
பி.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் 2 ம்பிரதிவாதி யாசிப் அகமது என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என் சகோதரர் நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். வழக்கு புரோநோட்டுகளை நான் பார்த்ததில்லை. புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல என்பதை எதை வைத்து சொல்லுகிறேன் என்றால் சாதிக் ராஜாவிற்கு நான் எந்த புரோநோட்டும் எழுதி கொடுக்கவில்லை அதை வைத்து சொல்லுகிறேன். நான் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் தான் என்னுடைய அசல் கையொப்பம் என்றால் சரிதான். வாசாஆ.3 கிரைய ஆவணத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். நான் வேண்டுமென்றே கையெழுத்தை மாற்றி, மாற்றி போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் என் தம்பி பெற்றுக்கொண்டார் நான் வாங்கவில்லை. நாங்கள் கம்பம், பாப்பச்சகவுடர் ஓடை தெருவில் குடியிருந்தவரை என் தம்பி யாசிப் அகமதுவிற்கு திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். மேற்படி முகவரியில் இருந்து நான் 2005 ல் வெளிநாட்டிலிருந்து வந்த பிறகு மூன்று மாதம் கழித்து வேறு முகவரிக்கு சென்றோம். என் சகோதரர் கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் சாதிக் ராஜா மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் விசாரணை நடைபெற்றது. நான் காவல்நிலைய விசாரணைக்கு சென்று வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. 2018 க்கு முன்பு எனக்கும், என் தம்பிக்கும் சொந்த வீடு கிடையாது. வாடகை வீட்டில் தான் இருந்தோம். 2018 க்கு பின்னர் கம்பம் டவுன் ஓடைக்கார தெரு, ஆதிபராசக்தி கோவில் சந்தில் தான் குடியிருந்து வருகிறேன். நானும் என் சகோதரரும் வாதிக்கு கூட்டாக புரோநோட்டு எழுதி கொடுத்தோம் என்றும், தற்சமயம் அதை மறுத்து பொய்சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் மியான்கான் தெருவில் குடியிருக்கவில்லை என வாதுரை செய்யாமல் தற்பொழுது வழக்கின் சாட்சியதின் மட்டும் முகவரியை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் கம்பம் வடக்கு

காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது, கம்பம் மெட்டு ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே குடியிருந்து வந்தார். புரோநோட்டில் உள்ளது எங்களுடைய கையொப்பம் இல்லை என்பதை கையெழுத்து நிபுணர் மூலம் நிரூபணம் செய்ய தயாராக உள்ளோம். என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்